செ.வெ.எண்: 210 நாள்:27.03.2018

திருநெல்வேலி பாளையங்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் கூட்டு பண்ணையத் திட்டத்தின் மூலம் 7 உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு ரூ.44.40 லட்சம் மதிப்பிலான பண்ணைக் கருவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப,அவர்கள் வழங்கினார்.

---------------------------------------------------

திருநெல்வேலி பாளையங்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் கூட்டு பண்ணையத் திட்டத்தின் மூலம் உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு பண்ணைக் கருவிகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப,அவர்கள் கலந்து கொண்டு 7 உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு ரூ.44.40 லட்சம் மதிப்பிலான பண்ணைக் கருவிகளை வழங்கினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் கூட்டு பண்ணையத் திட்டத்தின் மூலம் 19 ஊராட்சி ஒன்றியங்களில் வேளாண்மைத்துறையில் 315 உழவர் ஆர்வலர் குழுக்களும், தோட்டக்கலைத்துறையில் 50 உழவர் ஆர்வலர் குழுக்களும் என மொத்தம் 365 குழுக்கள் ஆரம்பிக்கபட்டு வங்கி கணக்கு தொடங்கப்பட்டுள்ளது. உரம், விதைகள், பூச்சி மருந்து போன்றவைகள் குழுக்களில் உள்ள அனைவரும் ஒன்று சேர்ந்து லாபம் பெறும் வகையில் கூட்டாக கொள்முதல் செய்யும் முறையும் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

மேலும் உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் வேளாண்மைத்துறையில் 63 குழுக்களும், தோட்டக்கலைத்துறையில் 10 குழுக்களும் என 73 குழுக்கள் தொடங்கப்பட்டு வங்கி கணக்குகளும் துவக்கப்பட்டுள்ளது. இக்குழுக்களுக்கு ரூ.5 லட்சம் அரசு மானியத்துடன் குழுக்கள் பங்களிப்பு சேர்த்து வேளாண் இயந்திரங்கள் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு 73 குழுக்களுக்கு 408 பண்ணை கருவிகள் வாங்குவதற்காக தமிழக அரசு ரூ.3.65 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதல் கட்டமாக இன்று 7 உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு ரூ.44,39,585 மதிப்பிலான 17 பண்ணை கருவிகள் இன்று வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகள் எளிதில் பண்ணைய வேலைகளை விரைந்து முடிக்க முடியும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை இணை இயக்குநர் திரு.பெருமாள்,மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.சாந்தி ராணி, துணை இயக்குநர்கள் (உழவர் பயிற்சி நிலையம்) திரு.பாலசுப்பிரமணியன், (மத்திய அரசு திட்டம்) திரு.உத்தண்டராமன், (மாநில அரசு திட்டம்) திரு.முகைதீன், வேளாண்மை உதவி இயக்குநர்கள் திரு.அசோக்குமார், திரு.நல்லமுத்து ராஜா மற்றும் வேளாண்மை அலுவலர்கள், துணை வேளாண்மை அலுவலர்கள் மற்றும் அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.